# சைவ சித்தாந்தத்தில் ஆன்ம நிலை

## [தேவபூபதி நடராஜா]

புத்தர் பெருமான் போதம் பெற்றுத் தனது கொள்கைகளைப் பரப்பத் தொடங்கிய காலத்தில், உலகம் தோன்றிய விதத்தைப் பற்றியே ஏறத்தாழ அறுபத்திரண்டு வெவ்வேறு கருத்துக்கள் பராத நாட்டில் இருந்ததாகக் கூறுவர். இது இந்திய மக்களிடையே தத்துவ உண்மைகளை அலசி, ஆராய்ந்து அறிவதில் இருந்த ஆர்வத்தையும், சிந்தனைத் திறனையும் வளர்ச்சியையும் காட்டுகிறது. இவ்வாறு சிந்தித்துப் பெற்ற முடிபுகள் பலவாயிருப்பினும், பற்பல முடிபுகளையும் நடுநிலையிலிருந்து ஆராய்ந்தவர்கள் போற்றும் முடிபு சைவசித்தாந்தம் எனலாம். வெவ்வேறு கொள்கைகளையும் நிறுவ முயலுவோர் எழுப்பும் கேள்விகளையும் வாதங்களையும் தாமே எழுப்பித் தக்க பதிலையும் தரும் சிவஞான சித்தியார் என்னும் நூலே இதற்குப் போதிய சான்றாகும். இதனாலேயே சைவசித்தாந்தத்தை முடிந்த முடிபு எனக் கூறுவர். சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையையும், அப்பொருள்களின் தன்மையையும், அவற்றிற்கிடையே உள்ள தொடர்பினையும் விளக்குவது. அம்முப் பொருள்களும் பதி, பசு, பாசம் எனப்படும். இவை மூன்றும் அநாதியானவை. எனினும் அவற்றின் பிற தன்மைகள் வேறுபட்டவை.

### பதி

பதி என்னும் சொல்லே "காப்பவர்" எனப் பொருள்படும். ஒரு அரசன் தன் குடி மக்களையும் நாட்டையும் காப்பது போல் பதியும் உயிர்களைக் காக்கும் தலைவர். அவர் எவ்வித மல சம்பந்தமுமற்ற நிர்மலர். எனவே எவ்வித பந்தமும் இல்லாதவர். சுட்டி அறியப் பெறுதவராதலால் ஞானேந்திரியங்களாலும் அகக் கரணங்களாலும் அறிய முடியாதவர். அறிய அரியவராயினும் தானே வந்து அறிவிப்பவர். அவர் ஆன்மாவின் மீது அருள் கொண்டு ஞானசிரியராக வந்து அறிவிக்கும் பொழுதே அவரை அறிய முடியும். இதையே

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்த தென் றுந்தீபற
தானாகத் தந்த தென் றுந்தீபற [1]

எனத் திருவுந்தியார் கூறும். திருக்களிற்றுப் படியாரும் இப்பதியே உலகைப் படைப்பதால் "உலகுக் கம்மையப்பர்" என்றும், அவரே "எல்லா உலகுக்கும் அப்புறந்தார் இப்புறத்தும் அல்லார் போல் நிற்பார் அவர்" என்றும் பாடும்.[2] எல்லாவற்றிற்கும், எவ்வுயிர்க்கும் மேலானவராய், ஒப்பற்றவராய், ஒரு குணமோ அடையாளமோ இல்லாதவராய், ஆனால் அதே வேளையில் அருவம், அருவுருவம், உருவம் என மூவேறு தோற்றங்களை உடையவராய், அணுவுக்கு அணுவாகவும் அகன்ற மகத்துக்கு அகன்ற மகத்தாகவும் எங்கும் வியாபித்து, இன்ப சொரூபராகவும், ஞானசொரூபராகவும் உள்ளவர் பதியாகிய இறை. அவரே ஒன்றாகவும், பலவாகவும் பதி அல்லது தலைவராகவும் உள்ளவர் என்பதனை

ஏகன், அநேகன் இறைவனடி வாழ்க [3]

எனத் திருவாசகமும்.

---

[1] திருவுந்தியார் *1.*

[2] திருக்களிற்றுப்படியார் *1.*

[3] திருவாசகம்: சிவபுராணம்

ஏகனுமாகி அநேகனுமா னவன்
நாதனு மாஞ னென் றுந்திபற
நம்மையே யாண்டா னென் றுந்திபற [4]

எனத் திருவுந்தியாரும் பாடுகின்றன. அவரே உலகினைப் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும் அருள் செய்பவர். சர்வ வல்லமையும் உடையவர். இவ்வைந்து தொழில்களும் அவருக்குத் திருவிளையாடல்களும். ஆனல் இவ்விளையாட்டுப் பயன் கருதி நடத்தப்படுவது. அப்பயன் கட்டுண்டிருக்கும் ஆன்மாக்களை விடுவிப்பதாகும். ஆன்மாக்கள் மேல் கொண்டிருக்கும் அளப்பருங்கருணை காரணமாக நிகழ்த்தும் இத்தொழில்கள் இறைவனுக்கு விளையாட்டைப் போன்று எளிதான செயல். பதி இச் செயல்களைத் தன் நியதிகளுக்கேற்ப நடத்தினுலும் எவ்வித நியதிகளும் அவரைக் கட்டுப்படுத்த முடியாது. எதனுலும் எவராலும் படைக்கப்படாதவர்; காக்கப் படாதவர்; அழிக்கப்படாதவர். எனினும் ஆன்மாக்கள் காட்டும் அன்பிற்கும், அவர்கள் காதலாகிக் கசிந்துருகி உகுக்கும் கண்ணீருக்கும் கட்டுப்படுவது போல் தோன்றி, உடனிருந்து உதவினுலும் அவரை முழுமையாக அறிய முடியாது. இதனைத் திருக்களிற்றுப் படியார்,

கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றுங்
கடல் அளக்க வாராதாற் போலப் — படியில்
அருத்தி செய்த அன்பரை வந்தாண்டதுவு மெல்லாம்
கருத்துக்குச் சேயனுய்க் காண் [5]

என விளக்கும். இறை கடல் போன்ற அகலமும், ஆழமும் பெருமையும் உடையவர். ஆன்மாக்கள் அக்கடலிலே குளித்து மகிழும் மக்களைப் போன்றவை. மக்கள் எவ்வாறு கடலை முழுமையாக அறிய முடியாதோ அவ்வாறே உயிர்கள் கடவுளையும் முழுமையாக அறிய முடியாது. அவரே முற்றறிவுள்ள சுதந்திரர்; என்றும் அழியா மெய்ப்பொருள்; ஆகவே சத்துப் பொருள் (சத்).

பாசம்

கயிறு, சங்கிலி, வலை போன்ற பொருள்களைக் கொண்ட பாசம் பிணிக்கும் அல்லது கட்டும் தன்மை உடையது. கயிறு போன்ற பொருட்கள் மிருகங்களையோ, பறவைகளையோ, மக்களையோ பிணித்துக் கட்டுப்படுத்துவது போல் பாசமும் உயிர்களைப் பிணித்து, அவை அடைய வேண்டிய பரிசுத்த நிலையை அடையத் தடையாக அமைவது. இது சடப் பொருள். அசத்து (அ–சத்). கயிற்றில் மூன்று புரிகள் இருப்பது போல் பாசத்திலும் மூன்று புரிகள் உள்ளன. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவற்றை மும்மலங்கள் என்றும் கூறுவர்.

## 1. ஆணவம்

இம்மலம் அனுதியானதால் மூலமலம் என்றும், பிரதிபந்தம் என்றும் சகஜமலம் என்றும் குறிக்கப்படும். இதற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினை விளக்கும் பொழுது செம்பிலே களிம்பு இருப்பது போல் உயிரிலே ஆணவம் இருப்பதாகச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன. களிம்பு செம்பின் ஒளியை மறைப்பதுபோல் ஆணவமும் உயிரின் அறிவை மறைக்கிறது. இதனுல் ஆணவத்தை இருள்மலம் எனவும் கூறுவதுமுண்டு. ஆனல் சாதாரண இருளைக் காட்டிலும் இது அபாயகரமானது. எனெனில், இருள் ஒன்றே எல்லாவற்றையும் நம்முடைய கண்ணிலிருந்து மறைத்தாலும், அதனுல் தன்னை மறைத்துக் கொள்ள முடிவதில்லை. இதனுல் இருள் இருப்பதை நாம் அறியமுடிகிறது. ஆணவமோ எல்லாவற்றையும் நம் அறிவிலிருந்து மறைத்துத் தானும் மறைந்து

4 திருவுந்தியார் 5.

5 திருக்களிற்றுப்படியார் 90

கொண்டு, நாம் செய்வதெல்லாவற்றிற்கும் நாமே காரணம் என நினைக்கச் செய்வது. ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு விதமாகச் செயல்படுவதால் அதற்கு எண்ணற்ற சக்திகள் உள்ளதாகவும் கூறுவதுண்டு. எல்லா உயிர்களிலும் படிந்துள்ளதால் வியாபகத் தன்மை உடையதாகக் கொள்ளப்படினும் இதன் வியாபகம் எல்லை உடையது. உயிர்களில் மட்டுமே வியாபித்துள்ளது. பதியை அணுகாதது.

## 2. கன்மம்

கருமம் என்பதே கன்மம் என்றும் வினை என்றும் கூறப்படும். இதனைச் செயல் எனப் பொதுவாகக் கொண்டாலும், மனம், வாக்கு, காயம் என மூன்றாலும் நிகழ்த்தப் படுவதைக் குறிப்பது. இது புண்ணிய கருமம், பாவ கருமம் என்றோ, நல்வினை, தீவினை என்றோ பகுக்கப்படும். இவ்விரண்டிலும் மனம், வாக்கு, காயம் சம்பந்தப்பட்டவை இருக்கும். இன்னும் பாவமோ புண்ணியமோ, பிற உயிர்கள் தொடர்பானவையாகில் பசு பாவம், பசு புண்ணியமென்றும், பதி தொடர்பானவையாகில் சிவபாவம், சிவபுண்ணியம் என்றும் சொல்லப்படும். தீமை செய்து மட்டுமல்லாமல், செய்ய வேண்டிய நல்ல அல்லது புண்ணிய கருமங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதும் பாவத்தில் அடங்கும் என்பர். புண்ணிய பாவ கருமங்களின் பயனை முறையே இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறது உயிர். ஒவ்வொரு பிறவியிலும் செய்யப்பட்டு, பின் அனுபவிக்க வேண்டிய வினை ஆகாமியம். முற்பிறவிகளில் ஆற்றிய எல்லாவற்றையும் ஒரே பிறவியில் அனுபவிக்க இயலாதாகையால் அப்பிறவிக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட அளவு வினைகளையே அனுபவிக்குமாறு அவ்வுடலைப் படைக்கும் பொழுது பதி ஊட்டுகிறார். இது பிராரப்த வினையாகும். ஊட்டப்படாமல் பின்னால் வரும் பிறவிகளில் அனுபவிக்கக் கூடியனவாய் எஞ்சியிருப்பது சஞ்சிதமாகும்.

## 3. மாயை

சைவ சித்தாந்தத்தில் மாயை உண்மையானது. இதனைக் கொண்டே உயிர்களுக்கு உடல், உலகம், உண்ண உணவு, உடுக்க உடை, வாழ இடம் போன்றவற்றை இறைவன் அளிக்கிறான். உயிர்கள் எடுக்கும் உடலிற்கும் அவை அனுபவிக்கும் இன்பதுன்பத்திற்கும் காரணம் கன்மமாயினும், அவற்றைத் துய்ப்பதற்கு மாயையினால் உண்டாக்கப் பெற்ற பொருட்கள் தேவை. மாயையினை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகையாகப் பிரிப்பர். இவற்றினின்றும் முறையே 5 சிவதத்துவங்களும், 6 வித்தியா தத்துவங்களும், 24 ஆத்மதத்துவங்களும் தோன்றுவதாகவும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. சைவ சித்தாந்தக் கொள்கையின் படி, இறைவன் உலகைப் படைக்கிறான் என்பது உயிர்களின் நல்வினை தீவினைகளுக்கேற்ப உடல் உலகம் போன்றவற்றை ஏற்படுத்துவதே. மாயையும் மலமானாலும் அது ஆணவத்தை அகற்ற உதவுவது. ஆணவம் அகன்றால் அல்லது வலியிழந்தால் கன்மம் ஏற்படாது. உயிர் விடுதலை பெறும். எனவே மாயையை வண்ணான் துணிகளின் அழுக்கைப் போக்குவதற்காக அவற்றை ஊறவைக்கும் உவர் மண்ணுக்கும், மக்கள் செப்புப் பாத்திரங்களில் படிந்திருக்கும் களிம்பினைப் போக்கித் துலங்கச் செய்வதற்காகத் தேய்க்கும் சாம்பல், புளி போன்றவற்றிற்கும் ஒப்பிடுவர். இம்மலம், ஆணவ மலத்தைப் போக்க இறைவனால் வழங்கப்பட்ட கருவியே. இதனைப் பயன்படுத்த வேண்டிய முறையில் பயன் படுத்தாமல் பத்திரப்படுத்த நினைப்பது அறிவீனம்.

பசு

உயிர், ஆன்மா, பசு என்பவை ஒரே பொருளைக் கொண்டுள்ள சொற்களாகப் பயன்படுத்தப் படினும், அவை உயிரின் வெவ்வேறு நிலைகளைக் காட்டுவன. ஆன்மா, உயிர் என்னும் இரண்டும் அதன் வியாபகத்தன்மையைக் காட்டுகின்றன. பாசத்தினால் கட்டப்பட்ட நிலையிலுள்ள உயிர் பசு எனப் பெயர் பெறும். இதனையே திருமூலரும்

"பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப" [6] என்றும், பசுவும் அனாதியானதே என்பதனைப்

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி. [7]

என்றும் பாடியுள்ளார். இன்னும் "பசுப் பல கோடி" [8] என்பதும் திருமூலர் வாக்கே.

உயிர் ஆணவத்தைப் போன்று சடப்பொருள் அன்று. அது அறிவுப் பொருள். ஆனால் அதன் அறிவு ஆண்டவன் அறிவு போன்று தானே அறிந்தும், அறிவித்தும் நிற்கக் கூடிய சுய அறிவன்று. அறிவித்தால் மட்டுமே அறியக் கூடியது. அவ்வாறு அறியும் போதும், ஒரு பொருளை ஒரு காலத்து அறிவதும், விட்டு விட்டு அறிவதும், முன் அறிந்ததைப் பின் மறப்பதுமாகிய சிற்றறிவினை உடையது. அதன் அறிவு பதியின் அறிவு போன்று சுயம்பிரகாசமானதுமன்று. ஏதாவது ஒரு துணையைக் கொண்டு விளங்கும் தன்மை வாய்ந்தது. எனவே வியஞ்சகப் பிரகாசமானது. கண்ணிலே ஒளி அல்லது பார்வையிருந்தாலும் இருள் மூடியிருக்கும் வேளையில் தன்னொளி கொண்ட கண் பார்க்க முடியாமல் விளக்கொளி கொண்டு பார்ப்பதைப் போன்றது ஆன்மாவின் அறிவு. இன்னும், அறியப்படும் பொருளில் அழுந்தி, அப்பொருளே தானாகி நின்று அறியும் தன்மையும் உயிருக்குண்டு. இதனையே மெய்கண்டாரும்.

அறிந்தும் அறிவதே யாயும் அறியாது
அறிந்ததையும் விட்டங்கு அடங்கி – அறிந்தது
ஏது அறிவும் என்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அது அது தான் என்னும் அகம். [9]

எனப் பாடியுள்ளார்.

ஆன்மாவானது இத்தன்மை காரணமாக அசத்துப் பொருளான பாசத்துடன் சேர்ந்திருக்கும் பொழுது பாசத்தில் அழுந்தியும் சத்துப் பொருளான பதியைச் சார்ந்திருக்கும் பொழுது பதியில் அழுந்தியும் இருக்கும். இதனால், பசுவைச் சத்துமல்லாமல் அசத்துமல்லாமல், அதே வேளையில் இரண்டின் தன்மையையும் சார்ந்திருக்கும் படிகம் போன்று பிரதிபலிக்கக்கூடியது என்றும், இரண்டின் தன்மையையும் பிரதிபலிக்கக் கூடியதால் சதசத்து (சத்+அ+சத்) என்றும் கூறுவர்.

## ஆன்மாவின் கட்டு நிலை

ஆன்மாவுடன் ஆணவமலம் சேர்ந்துள்ளதால் தளை அல்லது பந்தம் ஏற்பட்டது. பந்தப்பட்ட நிலையைப் பத்த (baddha) நிலை அல்லது பெத்த நிலை எனவும் கூறுவதுண்டு. இக்கட்டுநிலை ஒரே சீரானதாக இருக்கும் எனக் கொள்ள முடியாது.

ஒன்றதாய் அநேக சத்தியுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருந்து வத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து
என்றும்அஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே [10]

என்னும் சிவஞான சித்தியார் செய்யுளின்படி ஆணவம் வெவ்வேறு ஆன்மாவில் வெவ்வேறு விதமாகத் தோன்றிச் செயல்படுத்துவதால் அவற்றிலுள்ள மலமும் அனுத்

---

6 திருமந்திரம் 2384.

7 திருமந்திரம். 3.

8 திருமந்திரம் 2367.

9 சிவஞானபோதம். 3.3.

10 சிவஞானசித்தியார். 2.80.

தன்மையும் வெவ்வேறு அளவினதாக, வெவ்வேறு விதமாக அகற்றக் கூடியதாக இருக்கும். ஆணவமாகிய மூலமலம் படிந்திருக்கும் விதத்தை அடிப்படையாகக் கொண்டே இறைவன் அவற்றை ஈடேற்றுகின்றான். இவ்வடிப்படையில் ஆன்மாக்கள் மூன்று வகையாகப் பரிக்கப்படும்.

திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றூர்கள் அன்றி
ஒருமலத்த ராயு முளர் [11]

என்பது திருவருட்பயன்.

இதில், "ஒருமலத்தாராயுமுளர்" என்பது ஆணவம் மட்டும் உள்ள, அதுவும் நுண்ணிய அளவில் மட்டும் உள்ள ஆன்மாக்கள். அவர்கள் விஞ்ஞானகலர் எனப்படுவர். இவர்களுக்கும் "மாயா கன்மங்கள் உளவாயினும் ஆணவவலி சூக்குமமாதலால் அவர் கள் இவற்றால் தாக்கப் படாராதலால் ஒரு மலத்தா ரெனப்பட்டார்" எனவும், "சுத்தா சுத்த மாயைக்கும் சுத்த மாயைக்குமிடையேயுள்ள சுத்தபூத முதற் சுத்த காலமீறாக வுள்ள தத்துவ புவனங்களிலும் வாழ்வர்" எனவும் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் விளக்கியுள்ளார்கள். இவ்வான்மாக்களின் மலம் ஞானத்தினாலேயே போக்கவல்லதால் ஞானத்தினால் கலையும் நீங்கப் பெறுபவர்கள் என்பது அவர்களின் பெயரின் பொருளாகும். மூன்று மலங்களில் ஒன்று குறைந்தவர்கள் என்பது மாயை அல்லாத ஆணவமும் கன்மமும் உடையவர்களைக் குறிக்கும். இவர்களுக்கு ஆணவமலம் தூலமாக இருப்பினும் மிகுதியாக இல்லாததால் மாயாமலம் இருப்பினும் அதனால் தாக்கப்படாதவர்கள். சுத்தாசுத்த மாயா புவனங்களில் வாழ்ந்து, பிரளயத்தின் பொழுது கலை நீங்கப் பெறுவ ராதலால் பிரளயாகலர் எனக் குறிக்கப் பெறுவர். "திரிமலத்தார்" ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றாலும் பிணிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு ஆணவமலம் தூலதரமாக உள்ளதால் மும்மலங்களாலும் பிணிக்கப்பட்டுள்ளதை அறியார் எனத் திருவருட்பயன் கூறுகின்றது.

மூன்றுதிறந் துள்ளாரு மூலமலத்துள் ளார்கள்
தோன்றலர் தொத்துள்ளார் துணை.[12]

தொத்து என்பது இங்கே மலத்தினால் பிணிக்கப்பட்டிருக்கும் நிலை அல்லது கட்டுநிலையாகும்.

## கட்டுநிலையில் இருக்கும் ஆன்மாவின் மூன்று காரண அவத்தைகள்

பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ள ஆன்மா உடல், கரணம் போன்றவற்றைப் பெறு முன்னர் இருப்பதைக் கேவல அவத்தை அல்லது கேவல நிலை என்பர். இந்நிலையில் கலை தத்துவத்துடன் சேரும் தன்மையோ, அறம், அறிவு போன்ற குணங்களோ இல்லாமல் இருக்கும். ஆணவ மலத்தின் நிறமாகிய இருளில் அழுந்தியிருக்கும். பதியாகிய சிவம் தன் சக்தி மூலம் கலாதத்துவத்தைச் சேர்த்து அவ்வான்மாவின் ஆணவ மலத்தை ஓரளவு குறைத்து, ஒருடலை அளிக்கிறு அவத்தைகள். இந்த நிலை சகல நிலையாகும். இதில் ஆன்மாவானது தனு, கரண, புவன, போகங்களைப் பெற்றுச் செயல்படும். விருப்பு வெறுப்புக் களுடையதாய், அவை காரணமாக வினைவாய்ப்பட்டுப் பல பிறவிகளை எடுக்கும். பிறவிகளெடுத்துக் களைத்த பின் இறையருள், பெற்று, அதன் மூலம் ஞானத்தைப் பெற்றுச் சுத்த நிலையை அடையும். இதனையே மாணிக்கவாசகர்,

---

11 திருவருட்பயன். 2.2.

12 திருவருட்பயன் 2:3.

அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளி மேல்
நெறியெலாம் புலமாக்கிய எந்தையைப்
பந்தனை யறுப்பானை [13]

எனச் சுருக்கமாகப் பாடியுள்ளார். இதிலே அறிவில்லாத நிலை கேவல நிலையென்றும், அறிவதை அருளியது தனு, கரண, புவன போகங்களை அளித்துள்ள சகல நிலையென்றும், மேல் நெறியெல்லாம் புலமாக்கிய நிலை சுத்தநிலை யென்றும் கொள்ளலாம். இந்தச் சுத்த நிலையை அடைந்த பின்னரே பந்தங்களின்றும் விடுபெற முடியும். சகல நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு நனவு, கனவு உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என ஐந்து அவஸ்தைகளையும் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன.

## பிறவிகள்

கட்டுநிலையில் இருக்கும் ஆன்மா தனை நீங்கும் வரை பல பிறவிகள் எடுக்கும். இப் பிறவிகள் ஆன்மாக்களின் ஆணவ வலிக்கும் கன்மபலனுக்கும் ஏற்றவாறு மாயையினு லாகிய உடல், உட்கரணங்கள், உலகம், அனுபவிக்கும் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டவையாய் அமையும். இப்பிறவிகள் உயிர்த்தோற்ற முறைப்படி மேல் நோக்கிச் செல்வனவாக இருக்கும் எனச் சொல்வதற்கில்லை. ஒவ்வொரு பிறவியிலும் அனுபவிக்க வேண்டிய பிராரப்த வினைக்கு ஏற்றவாறு இறைவன் உடலை அளிப்பதால், அவ்வுடலும் அதற்கேற்ற ஞானேந்திரியங்களும் அகக் கரணங்களும் துணையாக அவ்வினைகளின் பயனை அனுபவிக்க வேண்டும். ஆகவேதான் மாணிக்கவாசகரும்,

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இந்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்[14]

எனப் பாடியுள்ளார். உயிர்ந்தோற்ற முறைப்படி கற்பாறை அணுக்களில் அடங்கிக் கிடந்து, பின் புல், செடி, மரமாகப் படைக்கப்பட்டு, ஊர்வனவாகிப் பறப்பனவாகி, விலங்குகளாகிப் பின் மக்கள், பேய், பூதம், அசுரர், முனிவர், தேவராகப் படைக்கப்படு வதாக வரிசைப்படுத்துவர். திருவாசகத்தில் மாற்றிக் கூறுவது, உயிர் வினைகளுக்கேற்ப மாறி மாறிப் பிறப்பதைக் குறிக்கிறது. இப்பிறவிகளை ஆன்மாக்களுக்கு இறைவன் கொடுப்பது அவர்கள் "பிறந்திளைத்தேன்" என உணரும் பொருட்டே. இந்த இளைப்பு இத்துன்பத்தினின்றும் விடுதலை பெற வேண்டும் என்ற முனைப்பினை ஏற்படுத்தி வேண்டிய தைச் செய்யத் தூண்டும்.

## அருளை அறிதல்

பிறவித் துன்பத்தினின்றும் விடுதலை பெறுவது ஆன்மாவின் முயற்சியால் மட்டும் கைகூடுவது அன்று. பதியருள் பெற்று, அதன் மூலம் மெய்ஞானம் பெற்றுலே விடுதலை யாகிய வீடு பேறு கிட்டும். எனினும் இறையருளைப் பெறுவதற்கு முன்னர், "அது யாது? அதனுல் பெறும் பயன் என்ன?" என்பதனை உணர்த்தப் பல பிறவிகள் தேவைப் படு கின்றன. இதனையே திருவருட்பயன்,

13 திருவாசகம்: திருச்சதகம். 32:1–2.

14 திருவாசகம்: சிவபுராணம். 26–30.

அன்றளவும் ஆற்றும் உயிர் அந்தோ அருள் தெரிவது
என்றளவொன் றில்லா இடர்[15]

எனப் பாடுகிறது. "அந்தோ! அருள் தெரிவது என்று?" என்பதில் பலப்பல பிறவிகளுக்குப் பின்னரும் அந்த இளைப்பையும் அதைத் துடைக்கும் வழியையும் உணராத உயிர்கள் உள்ளன என்பதனையும் அவை இரக்கத்துக்குரியவை என்பதனையும் விளக்குகிறது. ஆனல் பிறவித் துன்பத்தில் உழன்று அல்லலுற்று, அதனின்றும் மீள விரும்பும் உயிர் இறையருளை எளிதில் அறியும். இதனைத் திருவருட்பயன் ஒரு சிறந்த உவமை வாயிலாக விளக்குகிறது. வெயிலில் நடந்து வாடி வருந்தும் ஒருவனுக்கு நிழலைக் காட்டினல் போதுமானது. "அங்கே போயிரு," என யாரும் அவனுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய அவசியமில்லை. தானகவே விரைந்து சென்று அந்நிழலின் பயனைத் துய்ப்பான். அவ்வாறே பிறந்திளைத்த உயிரும் அருளைக் காணும் பொழுது அதனைப் பெற விழையும்; விரையும்.

தூநிழலார் தற்காருஞ் செல்லார் தொகுமிது போற்
தானதுவாய் நிற்குந்தரம்.[16]

ஆகவே இறைவனே அருள்பவனுயினும் ஆன்மா அவ்வருளை அறியவும், அதனைப் பெற்றுப் பயனுறும் பக்குவத்தை அடையவும் பிறவிகள் தேவைப் படுகின்றன. நிலையற்ற உலக இன்பத்தில் விருப்பமுடையவராய், ஆணவ மலத்தால் அறிவு மறைக்கப் பெற்றுள்ள ஆன்மாக்கள் அறிவு மயமாகிய அருளை அறியமாட்டா. ஆகவே உயிர் எடுத்த பிறவிகளில் உறும் துன்பங்கள் மூலம் பெற்ற அனுபவ முதிர்ச்சியால் திருவருளை உணரும் பக்குவம் பெற்று, இறை காட்டத் திருவருளை உணரும். திருவருளை முன் வைத்து அது காட்டும் வழியில் செல்லும் ஆன்மா சிவத்தைக் காணும். "எல்லாம் அவனல் வந்தது" என நினையாமல் "நான் அருளைப் பெற்றேன்" என நினைப்பது திருவருளினல் வரும் விளக்கமல்ல. அது ஆணவத்தினல் வரும் இருள்.

இறைவனது அருள் மூவித ஆன்மாக்களுக்கும் மூவேறு விதங்களில் தோன்றும். விஞ்ஞானகலரில் பக்குவமுள்ளவர்களுக்கு இறைவன் அவர்கள் அறிவிலே நின்று ஆணவ மலத்தை நீக்குவர்.. பிரளயாகலருக்கு முன்னிலையாய் நின்று ஆணவத்தையும் கன்மத்தையும் நீக்குவர். சகலரில் பக்குவமுடையோர்க்குக் குருவாய் வந்து மும்மலங்களையும் நீக்கியருளுவார்.

## திருவருள் வசப்படுதல்

இதனல் குருவடிவே திருவருள் என்பது தெளிவாகிறது. குரு மூலம், "பிறவிகள் தோறும் வளரும் வினைகள் இரண்டுமே விலக்கப்பட வேண்டியவை," என உணர்ந்து நல்வினையால் வரும் இன்பத்தில் விருப்போ தீவினையால் வரும் துன்பத்தில் வெறுப்போ இல்லாத நிலை ஏற்படும். இதுவே இருவினையொப்பு; அதாவது நன்மை தீமைகளை ஒப்புரவோடு நோக்கும் நிலை. இந்நிலை ஆணவவலி குறைந்த நிலையாகும். ஆணவவலி கெடுதல் மலபரிபாகமாகும். இருள் குறையக் குறைய ஒளி ஏறி ஏறி வருவது போல், ஆணவவலி கெடக் கெடச் சிவசக்தி ஆன்மாவில் பதிந்து அதனைச் சிவத்தோடு சேர்ப்பதற்குச் செலுத்தும். சிவசக்தி ஆன்மாவில் பதிவதே சத்திநிபாதம் (சத்தி+நிபாதம்) எனப்படும். இதன் பின்னரே சமய தீட்சை செய்து குரு தன் சிஷ்யனை உயிரைச் சரியா மார்க்கத்தில் விடுவர். இந்த இருவினையொப்பு என்பது பசுவினைக்கும் சிவவினைக்கும் உள்ளது. அதைப் போலவே சத்திநிபாதங்களும் மலபரிபாகங்களும் பதினன்கு வகைப் படும் எனச் சாத்திர நூல்கள் கூறுகின்றன. சரியா மார்க்கத்தில் செல்லும் ஆன்மா சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என

---

15 திருவருட்பயன். *2:10.*

16 திருவருட்பயன். *7:1.*

முறையே அனுஷ்டித்து யோகத்தில் யோகம் என்னும் நிலையை அடைய ஆணவ மலம் நன்றாக வலி கெட்டுச் சிவவினை ஒப்பு உண்டாகும். அதன் பின்னரே குரு அவ்வான்மாவை ஞானபாதத்தில் சேர்ப்பர்.

ஞான நிலையை அடைந்த உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது. இதனாலேயே பிருகதாரண்யக உபநிடதமும் இறைவனைச் "சத்தியத்தின் சத்தியம்" என்கிறது.[17] உடலில் உயிர் எவ்வாறு உண்மையைப் பொருளாய் உள்ளதோ அவ்வாறே உயிரின் பதி உண்மைப் பொருளாய் இருந்து வழி நடத்துவார். இந்த நிலையில் "எல்லாச் செயலும் அவன் செயல்" என்ற ஞானம் உதிக்கும்.

## பெத்த முத்தி

குருவின் திருவருளால் ஆன்மா பிரபஞ்சத்தையும் தன்னையும் பற்றிய உண்மையினை அறிந்து, அருளில் அழுந்துகிறது. இதனால் மெஞ்ஞானம் பெற்றுத் தன் அறிவு, தன் விருப்பம் என நினைத்துச் செய்த செயல்கள் எல்லாம் இறைவன் அறிவு, இறைவன் காரணமாகச் செய்யப்படுவதை இறையருள் உணர்த்த உணரும். இதனால் "நான்", "எனது" என்ற அறிவு கெட்டு இறையருளால் பெற்ற ஆனந்த அனுபவத்தில் ஆன்மா அழுந்தும். இதுவே பெந்தத்தில் முத்தியை அனுபவிக்கும் சிவயோக நிலை. இந்நிலையில் இறைவன் உயிராக நின்று அறிகிறான். அறிவிக்கின்றான். இது முத்தி நிலையினின்றும் மாறுபட்டது. ஏனெனில், முத்தி நிலையில் உயிர் இறைவனாக நின்று அறிகிறது. இதனைத் திருவுந்தியார் – தெளிவுக் கட்டுரை பெத்ததில் பெறும் முத்தியனுபவம் எனக் கூறும்.[18] இச்சிவபோக அனுபவத்தைப் பெற்றவர்கள் பிராரத்த வினை காரணமாக இன்ப துன்பங்களை அனுபவித்தாலும் அதிலே அழுந்திவிட மாட்டார்கள். திருவருள் மூலமே எதையும் உணர்வார்கள்.

இவ்வாறு இறை உயிராகவோ, உயிர் இறையாகவோ நிற்பதாகக் கூறுவதால் இறையும் உயிரும் ஒன்று எனக் கொள்வதல்ல. இரண்டும் வெவ்வேறு. இதனை விளக்கச் சிவஞானபோதச் சிற்றுரை விளக்கொளியையும் கண்ணொளியையும் பயன்படுத்துகிறது.[19] கண்ணிலே ஒளியிருந்தாலும் (அதாவது கண் பார்வை கெடாமல் இருந்தாலும்) இருளில் பார்க்க முடியாது. ஆனால் விளக்கின் வெளிச்சம் இருக்குமானால் கண் அதன் ஒளி கொண்டு பார்க்கின்றது என்கிறோம். இவற்றில் விளக்கில்லாமல் கண் ஒளி பயன்படாது. விளக்கின் ஒளி காட்டுவதால் தான் கண் பார்க்கின்றது. எனினும் கண்ணால் பார்ப்பது முக்கியமானதாக இருக்கும் பொழுது விளக்கைப் பார்ப்பதோ சிந்திப்பதோ இல்லை. நாம் பார்க்கிறோம், அப்பார்வையால் அல்லது பார்வையுடன் செய்ய வேண்டியவற்றைச் செய்கிறோம். எனினும் விளக்கின் ஒளி என வேறாக ஒன்று உள்ளது என்பதை நாம் மறுப்பதில்லை. இதைப் போன்றதே இறை ஆன்மாவாக நின்றுணர்த்தும் நிலை. பார்க்க முடியாத நிலையில் விளக்கின் ஒளி காட்டியதால் காண முடிந்தது என நினைக்கும் பொழுது கண்ணின் ஒளியைப் பற்றிய நினைவு முக்கியமானதாகத் தோன்றாது. விளக்கொளியே அங்கு முன்னிற்கும். எனினும் கண்ணொளி என ஒன்று இல்லை என்றோ அதுவும் விளக்கொளியும் ஒன்றுதான் என்றோ கூறமுடியாது. இதைப் போன்றதே உயிர் இறையாக நின்றுணரும் நிலை.

## மலநீக்கம் பெற்ற நிலை

மலம் நீங்கிச் சுத்தி பெற்ற நிலை சிவபோக நிலையாகாது. இறைவனின் திரோதன சக்தி ஆன்மாக்களுக்கு மலத்தினின்றும் விடுதலை பெற்றுக் கொடுத்த போதிலும், அது

17 பிருகதாரண்யக உபநிடதம். 2.1.20.

18 திருவுந்தியார் – தெளிவுக் கட்டுரை. பக்கம் 159.

19 சிவஞானபோதச் சிற்றுரை.

அருட் சக்தியாகி ஆன்மாக்களை இறைவனோடு சேர்த்த பின்னரே பேரின்ப நிலையை ஆன்மா எய்தும். இதனைத் திருவாசகம் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்[20] எனப் பாடுவதால் அறியலாம். எனினும் இவ்விரு நிலைகளுக்குமிடையே அதிக கால எல்லை இருப்பதாகக் கூறமுடியாது. சிவத்தோடு சேர்ந்த நிலையே சிவானுபவ நிலை. இந்நிலையில் ஆன்மா சிவமாக நின்று பேரின்பத்தை அனுபவிப்பதேயன்றி எவ்வித வினைகளும் செய்வதில்லை. இப்பேரின்பத்தை உணர்ந்தவர்கள் இறையையன்றி வேறெதையுங் காணுமல், தம் புலன்களை ஒடுக்கிச் சிவத்திலே இலயித்திருப்பர். இவர்களுக்குப் "பிறவி வேண்டாம்" என்ற சிந்தனை கூட எழுவதில்லை. எனெனில் "எல்லாம் அவன் செயல்" என எண்ணும் பக்குவமும், இன்ப துன்பங்களை ஒக்கவே நோக்கும் பண்பும், எந்நேரமும் இறைவனையே நினைத்து எதிலும் இறைவனையே காணும் தன்மையும் பெற்ற நிலை இது. இதனையே சேக்கிழார் பெருமானும்,

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றுர்.
கோதி லாத குணப்பெருங் குன்றனுர்.
கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர் [21]

எனப் பாடியுள்ளார்.

அப்பர் சுவாமிகள், உயிரானது போக்கும் வரவும் உள்ளதாய், இறப்புப் பிறப்புகளுக்கு உட்பட்டதாய், உடலோடும், அதன் மூலம் மனத்தோடும், மனம் மூலம் ஐம்புலன்களோடும் தொடர்பு கொண்டு, ஒரு நிலை நில்லாது ஆடி அலையும் தன்மையை ஊஞ்சலாட்டத்திற்கு ஒப்பிடுகிறுர். உடலின் பாலும் அதன் தொடர்பால் வரும் இன்ப துன்பங்களிலும் இருக்கும் பற்றினை நீக்கிப் பற்றற்ற, ஆத்ம சுத்தி பெற்ற நிலையானது கயிறு அறுந்த ஊஞ்சல் ஆட்டமற்ற நிலையில் தரையில் விழுந்திருப்பதைப் போன்றது என்கிறுர்.

உறுகயி றூசல்போல ஒன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவுநெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூசலானேன் அதிகைவீ ரட்டானரே. [22]

கயிறறுந்த ஊஞ்சலைப் பூமி தாங்குவது போல் போக்கும் வரவு மற்ற நிலையினை அடைந்த ஆன்மாவைப் பேரருளாளனுகிய பெருமான் தாங்குவர். அவ்வான்மாவும் சிவத்தில் பொருந்தி அமைதி பெறும்.

## முத்தி நிலை

முத்தி என்பது "முச்" என்னும் அடிச்சொல்லைக் கொண்டது. இது விடுவித்தல், விடுதலை செய்தல் எனப் பொருள்படும். ஆகவே முக்தி, மோட்சம், வீடு என்பவை ஒன்றினையே குறிக்கும். இது, பாசத்தால் கட்டுப்பட்ட பசுக்கள் அக்கட்டினின்றும் விடுதலை பெறுவதாகும். எனினும், விடுதலை பெறுவதென்றுல் வெறும் துன்பமற்ற நிலையல்ல. அது பேரின்பநிலை என்பதனைச் சித்தாந்த சாத்திரங்களும் சைவத் தோத்திரங்களும்

20 திருவாசகம். அச்சோப்பதிகம்: 1.

21 பெரியபுராணம்: திருக்கூட்டச் சிறப்பு. 7, 8.

22 தேவாரம் அடங்கன்முறை. 4422.

விளக்குகின்றன. அவ்வின்பத்தை இத்தகையது என எடுத்துக்கூற மட்டும் இயலாது என்பதனை,

மறியுலாந்திரைக் காவிரிவலஞ்சுழி மருவிய பெருமானைப்
பிறிவிலாதவர் பெறுகதி பேசிடில் அளவறுப் பொண்ணுதே. [23]

எனச் சம்பந்தர் பெருமான் பாடியுள்ளார். இதனையே திருவருட் பயனும்,

மூன்ருய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்ருத இன்பமதென் சொல். [24]

என விளக்கும். இதனால், ஒரு பொருளினைக் காணும் பொழுது, காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் என்ற மூன்றும் வெவ்வேருகத் தோன்ருது ஒன்ருகவே தோன்றுவது போல், சிவமும் உயிரும் ஒன்றிப் பெறுவது பேரின்பம் என்பதும், அந்த இன்பத்தின் தன்மையை எடுத்தியம்ப முடிவதில்லை என்பதும் தெளிவாகிறது.

## சீவன் முத்தி நிலை

இந்த முத்தி நிலை உடலோடு சம்பந்தபட்டிருக்கும் ஆன்மாவுக்கும் கிட்டக்கூடியதே. இவ்வான்மா மாயையினுலாகிய உடலில் இருந்தாலும் அதனல் ஏற்படும் சுக துக்கங்களினல் தாக்கப்படாது, ஞானத்துள் அடங்கித் தன் சிவானுபவத்தினல் பேரின்பம் நிறையப் பெற்றுச் சலனமற்றிருக்கும். இந்த நிலை ஆனந்த நித்திரை கொள்வதை ஒக்கும் எனத் திருவருட் பயன் கூறும்[25] ஆணவத்தோடு சேர்ந்து அணுத்தன்மை பெற்றதால் வியாபகத் தன்மையை இழந்த ஆன்மா சர்வவியாபியாகிய பதியோடு சேர்ந்து வியாபகத் தன்மையைப் பெறுகிறது.[26] இதனல் இவ்வான்மா உடலோடு கூடியிருக்கும் பொழுது செய்யும் செயல்கள் பதியின் செயலாகிவிடும். அவற்றின் பயன் அதனைச் சாராது. ஆகவே ஆகாமிய வினை புதிதாகச் சேராது. சஞ்சிதவினையானது குரு திட்சையால் போக்கப்படுவதால் பிராரப்த வினையே எஞ்சியிருந்து, உடலோடு கழியும். இவ்வாறு எல்லா மலங்களும் நீங்கப் பெற்றுப் பிராரப்த வினை தீரும் வரை உடலெனும் கூட்டிலே தங்கியுள்ள உயிர்கள் சீவன்முத்தர்கள், அணைந்தோர், மெய்யடியார் எனப் பலவாறு அழைக்கப்படுவர்.

பேரறிவைப் பெற்ற முத்தருக்குப் பரமுத்தியும் இம்மையிலேயே கிட்டும் எனவும் கூறுவதுண்டு.[27] எவ்வித வினையும் அவர்களைத் தாக்காதாதலால் அவர்கள் நிலை பரமுத்தி போன்றதாகும்.

விடையான் விரும்பி என் உள்ளத்திருந்தான் இனி நமக்கிங்கு
அடையா அவலம் அருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத்து அயன் போல்பவர் பாதிரிப் புலியூர்
உடையான் அடியார் அடியோங்கட் கரியதுண்டே.[28]

---

23 தேவாரம் அடங்கன் முறை. 2625.

24 திருவருட்பயன். 8:9.

25திருவருட்பயன். 10.1.

26 திருவருட்பயன். 10.5.

27 திருவருட்பயன். 10.9.

28 தேவாரம் அடங்கன்முறை. 5073.

## உதவிய நூல்கள்

அருணந்தி தேவநாயனுர், சிவஞான சித்தியார்: சுபக்கம், திருவாவடுதுறை ஆதீனம், 1954.

அருணந்தி தேவநாயனுர், சிவஞான சித்தியார்: பரபக்கம், திருவாவடுதுறை ஆதீனம், 1955.

அருணுசலம், திருக்களிற்றுப் படியார்; மூலமும் பழைய அனுபூதி உரையும், சென்னை, 1962.

ஆறுமுக நாவலர், சிவஞானபோதச் சிற்றுரை, சென்னை, சர்வதாரி வருஷம்.

உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன்; விஞவெண்பா, திருவாவடுதுறை ஆதினம், 1953.

சேக்கிழார், பெரியபுராணம், சென்னை, 1950.

திருமூலர், திருமந்திரம் [2 பாகங்கள்], சென்னை, 1962.

தேவாரம் அடங்கன்முறை, சென்னை, 1957.

மாணிக்கவாசகர், திருவாசகம், [சுப்பிரமணியம் பிள்ளை உரையுடன்], சென்னை, 1959.

ஸ்ரீநிவாஸாசாரியன், தே. ஆ. திருவுந்தியார் – தெளிவுக் கட்டுரை, திருவாவடுதுறை, 1954.

Balasubramaniam, K. M. *Special Lectures on Saiva Siddhanta,* Annamalai University, 1959.

Hume, Robert E. *The Thirteen Principal Upanisads,* Madras, 1968.

Rajamanikkam M. *The Development of Shaivism in South India*· Dharmapuram, 1964.